**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 107/2022**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 07–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 07.10.2025 | | |
| பெயர்: | வசந்தலட்சுமி (PW–1 Chief ) | கணவர் பெயர்: | ரவி |
| கிராமம்: | கோட்டுச்சேரி | தாலுக்கா: | காரைக்கால் |
| தொழில்: | விவசாயம் | வயது : | 58/2025 |

**முதல் விசாரணை : 07.10.2025**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 23.04.2022 தேதியிட்ட தாவா சொத்துக்களைப் பொறுத்து கணினி சிட்டா இணையவழி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.1** ஆகவும்

2. 12.03.2022 தேதியிட்ட எனது பெயரில் ஏற்பட்ட அனுபவ உரிமை மாற்றுப் பத்திரம் அசல் **வா.சா.ஆ.2** ஆகவும் (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை தெரிவித்ததால் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. ஆட்சேபணை தீர்ப்பின் போது விவாதிக்கப்படும்)

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.